# குடிசைப்பகுதி தொடர்பான கொள்கைகள் மற்றும் சென்னையில் அதன் அமலாக்கம்:

## சமீபத்திய நிகழ்வுகள், மற்றும் எதிர்காலத்தில் என்ன எதிர்நோக்கலாம்

கடந்த 10 வருடங்களாக, இரண்டு குறிப்பிடத்தக்க மத்திய அரசின் திட்டங்களான JNNURM மற்றும் RAY மூலமாக அதிகபட்ச நிதியை இந்திய நகரங்கள் பயன்படுத்தி உள்ளன. இந்நிதி நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஏழைகளுக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்த பெருவாரியாக பயன்படுத்தப்பட்டன. சென்னையில் JNNURM மற்றும் RAY மூலமாக ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி அறியலாம்.

**JNNURM**

- 2014-ஆம் ஆண்டு வரை ரூ.5324.05 கோடி மதிப்புள்ள 76 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றுள் ரூ.3935.8 கோடிக்கான 52 திட்டங்கள் நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுகை பிரிவின் (UIG) கீழும், ரூ.1388.27 கோடிக்கான 24 திட்டங்கள் நகர்ப்புற ஏழைமக்களுக்கான அடிப்படைச் சேவைகளுக்கான பிரிவின் (BSUP) கீழும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- UIG-ன் பெரும்பாலான திட்டங்கள் மற்றும் நிதிகள் குடிநீர் வழங்கும் சேவையை மேம்படுத்தவே பயன்படுத்தப்பட்டன. UIG-ல் 35% க்கான நிதி (ரூ.1390 கோடி) இதற்காகவே ஒப்புதல் வழங்கப்பட்டது.

- ஆலந்தூர் மற்றும் திருவெற்றியூரில் உள்ள ஆறு பகுதிகளில் நாங்கள் மேற்கொண்ட கள ஆய்வில், தனிநபர் குடிநீர் குழாய் இணைப்பு வசதி, குறிப்பாக ஏழைகளுக்கு மேம்படுத்தப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. சொத்துரிமை தீர்மானிக்க இயலாத பகுதிகளில்

மக்கள் பொது குழாய் மற்றும் அடிப்பம்பு சேவையையே நாடியுள்ளனர். மேலும் பலர் தனியார் குடிநீர் சேவையை (லாரி மற்றும் தண்ணீர் கேன்) சார்ந்துள்ளனர்.

- நகர்புற ஏழைமக்களுக்கான அடிப்படை சேவைகள் (BSUP) பிரிவின்கீழ் 77% (ரூ.1073 கோடி) நிதி மோசமான வடிவமைப்பு மற்றும் கட்டடம், போதாத அடிப்படை வசதிகள் அடங்கிய பிரம்மாண்டமான அடுக்குமாடி குடியிருப்புகள் பெரும்பாக்கம் பகுதியில் அமைக்கவே பயன்படுத்தப்பட்டன.
- நகரத்தில் சில அங்கீகரிக்கப்பட்ட குடிசைப்பகுதிகளில் மட்டுமே வீட்டு உதவி மற்றும் இருக்கும் இடத்திலேயே அடிப்படை வசதிகள் மேம்படுத்திக் கொடுக்கப்பட்டன.
- JNNURM - ன் மூலமாக வீட்டுமனை பாதுகாப்பு தொடர்பாக எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

**RAY**

- மக்களின் பங்கேற்ப்புடன் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கபடாத குடிசைப்பகுதிகளில், வீட்டுமனை பாதுகாப்பு மற்றும் இருக்கும் இடத்திலே மேம்பாடுகள் செய்து "குடிசைகளில்லா நகரத்தை" உருவாக்க 2009-ல் ஏற்படுத்தப்பட்ட திட்டமே ராஜீவ் அவாஸ் யோஜனா (RAY).
- மிகக்குறைவான மக்களின் பங்கேற்ப்புடன் சென்னையிலுள்ள குடிசைப்பகுதிகளின் கணக்கெடுப்பு டாராஷா என்கிற தனியார் ஆலோகச மையத்தின் மூலம் நடத்தப்பட்டு 2015-ல் வெளியிடப்பட்டது.

- இருக்கும் இடத்திலேயே மேம்பாடு என்கிற RAY-ன் நோக்கத்திற்கு மாறாக இத்திட்டத்தின் கீழ் சென்னையில் ஒப்புதலளிக்கப்பட்ட ஒரே திட்டம் ரூ.115.2 கோடியில் அத்திப்பட்டு பகுதியில் கட்டமைக்கப்பட்ட 1,472 மறுகுடியமர்வு குடியிருப்பாகும்.
- குடிசைமக்களுக்கு சொத்துரிமை வழங்குவதற்கான எந்த நடவடிக்கையோ, சட்டமோ இதுவரை ஏற்றப்படவில்லை.
- RAY-ல் கணக்கெடுப்பின் ஒருபகுதியாக காலியிடம் குறித்த வரைப்படம் தீட்டுவது இருப்பினும் இதுவரை எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

**தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் புதிய திட்டங்கள்**

கடந்த சில மாதங்களில் புதிய திட்டங்கள் பல அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னையைக் குறித்த தெளிவான தகவல்கள் வெளியிடப்படாத நிலையிலும், இவற்றிலிருந்து நாம் என்ன எதிர்ப்பார்ப்பது குறித்த சிறு தொகுப்பு பின்வருமாறு:

***அனைவருக்கும் வீடு - பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா (PMAY)***

TNSCB அதிகாரிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் மூலமாக RAY-க்கு மாற்றாக மத்திய அரசின் அனைவருக்கும் வீடு - பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா (PMAY) திட்டம் 2015 - 2022 -ல் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரியவந்தது. PMAY-ன் மூலமாக அனைத்து குடும்பங்களுக்கும் குடிநீர் இணைப்பு, கழிவுநீர் வசதி, 24*7 மின்வசதியுடன் கூடிய தரமான வீடு அமைக்க உள்ளது. அனைவருக்கும் வீடு தொடர்பான செயல்திட்டத்திற்காக ஒவ்வொரு நகரத்திலும் வீடுகள் தேவைவிபரம் குறித்த கணக்கெடுப்பு நடத்த வேண்டும். 2022 வரையிலான ஆண்டு அமலாக்க திட்டம் தயாரிக்க வேண்டியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நான்கு அமலாக்க வாய்ப்புகள் உள்ளன.

**தனியார் பங்கேற்புடன் குடிசைப்பகுதியில் இருக்கும் இடத்திலேயே மறுவளர்ச்சி:** அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுடன் தகுதியுடைய குடிசைவாசிகளுக்கு இதன் மூலமாக வீடுகள் வழங்கப்படும். குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானியத்தொகையை பகிர்ந்துகொள்ள (cross subsidization) விற்பனைக்கான காரணியும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. இம்முறை ஆட்சேபனையில்லாத குடிசைப்பகுதியாக அமல்படுத்த வழிகோலும்.

**கடனோடு மானியம் வழங்கும் மலிவான வீடுகள்**: புதிய வீடுகளின் கட்டமைப்பிற்கு அல்லது மேம்பாட்டிற்கு EWS மற்றும் LIG வாசிகளுக்கான வீட்டுகடனின் வட்டியை மானியமாக வழங்குகிறது. ULB மற்றும் பிற அமைப்புகளின் மூலம் வீட்டு கடன் வழங்க வழிகளும் செய்யப்படலாம்.

**பங்குதாரர்களின் மூலமாக மலிவான வீடுகள்:** அரசு தன் தொடர்பான அமைப்புகள் (அ) தனியார் நிறுவன கூட்டுறவோடு மலிவான வீடுகள் கட்டிக்கொடுக்கலாம்.

**தனிநபர் பயனாளியின் வீட்டு கட்டமைப்பிற்கான மானியம்:** தகுதியுடைய EWS குடும்ப பயனாளிகளுக்கு ரூ.1.5லட்சம் உதவியாக வழங்கப்படும்.

RAY - லிருந்து PMAY பலவிதங்களில் வேறுப்பட்டுள்ளது பின்வருமாறு:

- **ஏழைகளுக்கான வீட்டுமனைப் பாதுகாப்பு மற்றும் நிலயுரிமை தொடர்பாக இத்திட்டத்தில் குறிப்பிடவில்லை. மேலும் குடிசைப்பகுதியில் வசிக்கும் நகர்புற ஏழைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் விதமாக சட்டபூர்வமான பத்திரம் வழிகள் இல்லாததால் மேலும் பாதிப்புக்கு ஆளாக்கும்.**

- ஆட்சேபணைக்குரிய குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு அரசு வழங்கும் மலிவான வீடுகளே ஒரே வாய்ப்பாகும். சென்னையில் மேலும் பல மறுகுடியமைப்புகளை புறநகரில் தனியார் மூலமாக கட்டுவதற்கும் வாய்ப்புள்ளது.

- இந்நிலையில் தனியார் நிறுவனங்களை மலிவான விலை குடியிருப்புகளுக்கு உட்படுத்துவதனால் அவர்களின் இலாபநோக்கு இதன் பொருளை மாற்ற வாய்ப்புள்ளது. எனினும், சென்னையிலும் உலகின் மற்ற பகுதிகளிலும் கலப்பு பொருளாதார மக்களின் குடியிருப்புகள் செழிப்படைந்திருக்கின்றன.

- நகர்புற ஏழைகளுக்கு எதிராக வங்கிகள் செயல்பட்டு வரும் நிலையில் தகுதியுடையவர்களுக்கும் வீடுகடன் வழங்குவதற்கு வங்கிகள் எந்த அளவு முன்வருவார்கள் என்பது சந்தேகமே. இதையே TNSCB அதிகாரிகளும் வெளிப்படுத்தினர்.

- TNSCB அதிகாரிகள் பகிர்ந்து கொண்டதன்படி, JNNURM மற்றும் RAY-யை போன்று மத்திய அரசிடம் இருந்து பெருவாரியான நிதி வருவதற்கு PMAY-இல் வாய்ப்பு குறைவு. எனவே பெரும்பாக்கம் போன்ற பிரம்மாண்டமான மறுகுடியமர்வை தடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. சுய உதவியுடன் கட்டப்பட்ட வீட்டுமனைகள் சென்னையில் வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இது அறிவிக்கப்பட்ட (அ) ஆட்சேபணை இல்லாத குடிசைப்பகுதிகளுக்கு மட்டுமே கிடைக்கும் விதமாக இருக்கும்.

***ஸ்மார்ட் சிடீஸ் பணி***

முக்கிய உள்கட்டமைப்பு வசதிகள், ஏற்புடைய வாழ்க்கைத் தரம், சுத்தமான நிலையான சுற்றுசூழல், மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் 'ஸ்மார்ட்' தீர்வுகளை வழங்கும் நகரங்களுக்கு ஊக்கம் அளிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். போதுமான தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து, சுகாதார வசதிகள், மலிவான வீட்டு வசதிகள், IT இணைப்பு வசதிகள் (IT connectivity and digitalization), நல்ல ஆளுகை (good governance), நிலையான சுற்றுசூழல், பாதுகாப்பு வசதிகள், சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகள் ஆகியவை இத்திட்டத்தின் உள்கட்டமைப்பு அம்சங்கள் ஆகும். வசதிகளின் மின்னணு விநியோகம் (electronic service delivery), குற்றங்களின் வீடியோ கண்காணிப்பு, கழிவிலிருந்து ஆற்றல் பெறுவதற்கான முயற்சிகள் (waste to energy initiatives), தண்ணீர் மற்றும் மின்சார செலவழிவுகளை கண்காணிக்கும் 'ஸ்மார்ட்' மீட்டர்கள், 'ஸ்மார்ட்' பார்க்கிங் வசதிகள், 'டெலி-மருத்துவம்' போன்றவை நகரத்தின் 'ஸ்மார்ட்' தீர்வுகளாகும்.

பொருளாதார வளர்ச்சியை இயக்குவதும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குடிசைப்பகுதிகள் போன்ற சிறு உள்ளூர் பகுதிகளை மேம்படுத்துவதுமே இந்த திட்டத்தின் வெளிப்படையான நோக்கமாகும். மத்திய அரசு இதை அமல்படுத்த எந்த குறிப்பிட்ட வழியும் பரிந்துரைக்கவில்லை: ஒவ்வொரு நகரமும் தனது தொலைநோக்குத் திட்டத்தை தானாகவே உருவாக்கிக்கொள்ள வேண்டும். இந்தியாவில் 100 ஸ்மார்ட் சிடீஸ் உருவாக்குவதற்காக ஏறத்தாழ ஒரு லட்ச கோடி ரூபாய் (Rs. 1 lakh crores) மத்திய மற்றும் மாநகர அரசு நிதி கிடைக்கக்கூடும்.

***அட்டல் புதுப்பித்தல் மற்றும் நகர மறுமலர்ச்சி திட்டம் (AMRUT)***

அனைத்து வீடுகளுக்கும் தண்ணீர், சாக்கடை மற்றும் நகர்புற போக்குவரத்து வசதிகள் வழங்கவே AMRUT என்ற திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் தண்ணீர் குழாய்கள் மற்றும் சாக்கடை இணைப்புகள் தருவதை மீறி, சேவைகளின் வரையறைகளை (service level benchmarks) அடைவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். நகரங்களின் சௌகரியத்தன்மையை மேம்படுத்தவதற்காக பூங்காக்கள் போன்ற பொது இடங்கள் மேம்படுத்தப்படும். நகர்ப்புறங்களின் ஆளுகையை மேம்படுத்துவதற்க்காக சில சீர்த்திருத்தங்கள் அமல்படுத்தப்படும்.

AMRUT திட்டம் 500 நகரங்களில் அடுத்த 5 வருடங்களுக்கு (2020 வரை) ருபாய் 50,000 கோடி செலவில் அமல்படுத்தப்படும்.

**ஸ்மார்ட் சிடீஸ் மற்றும் AMRUT திட்டங்களின் விளைவுகள்?**

உயர்தரமான தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் ஸ்மார்ட் சிடீஸ் திட்டம் ஏழைகளுக்கு சாதகமான நகரத்தை உருவாக்குமா என்ற கவலை பரவலாக காணப்படுகிறது. ஆனால் இத்திட்டம் ஒவ்வொரு நகரத்திற்கான தொலைநோக்கு திட்டத்தை உருவாக்கும் முழு பொறுப்பை மாநகர அரசுகளிடமே ஒப்படைத்துள்ளது. மேலும், எல்லா மக்களின் ஆசைகள் மற்றும் இலட்சியங்களை உள்வாங்கும் - ஏழை மக்களின் லட்சியங்களுக்கு உள்பட்ட - திட்டமாக இந்த திட்டம் உருவாகும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஏழை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் திட்டமாக இத்திட்டத்தை அமைக்க, நாம் மாநகர அரசு நிறுவனங்களை வற்ப்புறுத்த வேண்டும். AMRUT திட்டமும் நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டமாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

TCN
Transparent Cities Network

CAG
Citizen consumer and civic Action Group